**செய்தி வெளியீடு எண்: 422** **நாள்:10.07.2021**

## <u>செய்தி வெளியீடு</u>

### <u>சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் 311ஆவது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டுச் சென்னை எழும்பூரில் அவரது சிலைக்கு, தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மலர் தூவி, மாலை அணிவித்துச் சிறப்பிக்கிறார்கள்.</u>

சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் பிறந்தநாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் 311ஆவது பிறந்தநாளை முன்னிட்டுத் தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, எழும்பூர், இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின்கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு 11.07.2021 அன்று மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

வீரன் அழகுமுத்துக்கோன், வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் வீரத்திலகமாய் விளங்கிய மாவீரர் ஆவார்.

வீரன் அழகுமுத்துக்கோன் 11.07.1710 அன்று தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகேயுள்ள கட்டாலங்குளத்தில் பிறந்தார். இவரது தந்தை முத்துக்கோன், தாயார் பாக்கியத்தாய் அம்மாள் ஆவர்.

1755ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் நெல்லைச் சீமையிலுள்ள எல்லா பாளையக்காரர்களிடமும் நேரடியாக வரி வசூலிப்பதை விடுதலை உணர்வு நிரம்பப்பெற்ற வீரர் அழகுமுத்துக்கோன் எதிர்த்தார்.

எட்டப்ப மன்னர் வரிகட்ட மறுத்ததால், 1756–இல் மதுரை, நெல்லைச் சீமைக்கு ஆங்கிலேயர்களின் கமாண்டராக இருந்த கான்சாகிப்பின் பீரங்கிப்படை எட்டயபுரத்தைத் தாக்கியதைத் தொடர்ந்து எட்டயபுரம் ஆங்கிலேயர் வசமானது.

விடுதலை வீரர் அழகுமுத்துக்கோன் எட்டப்ப மன்னரைக் காப்பாற்றி அவரை பெருநாழிக்காட்டில் பாதுகாப்பாக வைத்திருந்தார்.

எட்டயபுரத்தை மீட்டெடுக்க விடுதலை வீரர் அழகுமுத்துக்கோன் மாவேலி ஓடை பெத்தநாயக்கனூர் பகுதியிலிருந்து வீரர்கள் அடங்கிய படையினைத் திரட்டி மன்னர் வெங்கடேஸ்வர எட்டப்பர், வீரன் அழகுமுத்துக்கோன் ஆகியோர் தலைமையில் இருபெரும் படைகள் இருவேறு திசையில் போர் தொடுக்கப் புறப்பட்டனர்.

வீரன் அழகுமுத்துக்கோன் படையினர் பெத்தநாயக்கனூர் கோட்டையில் இரவில் தங்கியிருந்ததை உளவறிந்த கான்சாகிப் படையினர் திடீர் தாக்குதலை நடத்தியதால், இத்தாக்குதலை எதிர்கொள்ள இயலாமல் வீரர்கள் இப்போரில் வீர மரணம் அடைந்தனர்.

வீரன் அழகுமுத்துக்கோன் மற்றும் 255 வீரர்களை நடுக்காட்டூர் சீமை என்ற இடத்திற்கு இழுத்துச்சென்று அவர்களில் 248 பேரின் வலது கரங்களை வெட்டி எறிந்த கொடுமையை நிகழ்த்தினார்கள் ஆங்கிலேயர்கள்.

வீரன் அழகுமுத்துக்கோன், கெச்சிலணன் சேர்வை, வெங்கடேசுரரெட்டு சேர்வை, முத்தழகு சேர்வை, பரிவாரம் முத்திருளன் இவரது தம்பி செகவீர ரெட்டுலட்சுமணன், தலைக்காட்டுபுரம் மயிலுப்பிள்ளை ஆகிய ஏழு பேரையும் பீரங்கி வாயில் கட்டி வைத்துச் சுட்டுத்தள்ளினார்கள்.

1759ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்தக் கொடூரத்தை நிகழ்த்தினார்கள் வெள்ளையர்கள்.

சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் வீரத்தையும் வரலாற்றையும் உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில் தூத்துக்குடி மாவட்டம், கட்டாலங்குளத்தில் உள்ள அன்னாரது நினைவு மண்டபத்தில் ஆண்டுதோறும், அவரது பிறந்தநாள் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அன்னாருக்கு மேலும் பெருமை சேர்க்கும் விதமாக, சென்னை, எழும்பூர், இரயில் நிலையம் அருகில் அமைக்கப்பட்டுள்ள வீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் ஜூலை 11 அன்று அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

அதன்படி, சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில், சென்னை, எழும்பூர், இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின்கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு 11.07.2021 அன்று காலை 9.30 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கிறார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**